## மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர் : திரு.எஸ்.நாகராஜன், இ.ஆ.ப.,

ந.க.எண். 12335/2019/ஜி3 நாள்:06.05.2019

பொருள்: வீட்டுவசதி - மதுரை மாவட்டம் - முந்தைய தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) சட்டத்தினை நீக்கரவு செய்து புதிய தமிழ்நாடு நில உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை ஒழுங்குபடுத்துதல் சட்டம், 2017-யை அமுல்படுத்துதல் - உரிய அலுவலரை(Rent Authority) நியமனம் செய்து ஆணையிடுதல் - தொடர்பாக,

பார்வை:

1. தமிழ்நாடு நில உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை ஒழுங்குபடுத்துதல் சட்டம், 2017.
2. G.O(MS)No.35,வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சித்துறை(HB4), நாள்:22.02.2019.
3. G.O(MS)No.36,வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சித்துறை(HB4), நாள்:22.02.2019.
4. தமிழ்நாடு அரசு முதன்மைச்செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, தலைமைச்செயலகம், சென்னை, அவர்களின் கடிதம் எண்:867/HB4/2019-1, நாள்:25.02.2019 கடிதம் எண்: 867/HB4/2019-2, நாள்:07.03.2019 மற்றும் கடிதம் எண்: 867/HB4/2019-8, நாள்:25.4.19

**ஆணை:**

தமிழ்நாடு அரசின் முந்தைய வாடகை கட்டுப்பாட்டுச்சட்டமான தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் கட்டுப்பாட்டுச் சட்டம், 1960) சட்டத்தினை நீக்கரவு செய்து பார்வை-1ல் கண்டுள்ளவாறு தமிழ்நாடு நில உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை ஒழுங்குபடுத்துதல் சட்டம், 2017-ன்படி புதிய சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இச்சட்டம் கடந்த 22.02.2019 முதல் அமுல்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளது. பார்வை-4ல் கண்ட கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு, மேற்படிச்சட்டத்தினை நடைமுறைப்படுத்த, இச்சட்டம் பிரிவு-30-ன்கீழ் துணை ஆட்சியர் நிலையில் உரிய அதிகாரம் படைத்த அலுவலராக (Rent

Scanned by CamScanner

Authority) மாவட்ட ஆட்சித்தலைவரால் நியமனம் செய்யலாம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

**(Section 30: "The Collector shall, with the previous approval of the Government, appoint officer, not below the rank of Deputy Collector to be the Rent Authority for the area within his jurisdiction to which this Act applies")**

எனவே, தமிழ்நாடு நில உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை ஒழுங்குபடுத்துதல் சட்டம்,2017-ன்படி மதுரை மாவட்டத்தில் அனைத்து வட்டங்களுக்கும், பொதுமக்களின் கோரிக்கைகள் தொடர்பான விண்ணப்பங்களை பரிசீலனை செய்து உரிய உத்தரவுகள் பிறப்பிக்கும்பொருட்டு உரிய அதிகாரம் படைத்த வாடகை நிர்ணய அலுவலர்கள் (Rent Authority) கீழ்க்கண்டவாறு நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | ஒதுக்கீடு செய்யப்பட்ட வட்டங்களின் பெயர் | வாடகை நிர்ணய அலுவலர் (Rent Authority Officer) |
|---|---|---|
| 1 | மதுரை வடக்கு , மதுரை மேற்கு மற்றும் வாடிப்பட்டி | வருவாய் கோட்டாட்சியர், மதுரை. |
| 2 | மேலூர், மதுரை தெற்கு மற்றும் மதுரை கிழக்கு | வருவாய் கோட்டாட்சியர், மேலூர். |
| 3 | திருமங்கலம், திருப்பரங்குன்றம் மற்றும் கள்ளிக்குடி | வருவாய் கோட்டாட்சியர், திருமங்கலம். |
| 4 | உசிலம்பட்டி மற்றும் பேரையூர். | வருவாய் கோட்டாட்சியர், உசிலம்பட்டி. |

ஒம்/-எஸ்.நாகராஜன்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
மதுரை.

/உ.ந.உ.ப/

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,

Scanned by CamScanner

<u>பெறுநர்:</u>

அனைத்து வருவாய் கோட்டாட்சியர்கள்,
மதுரை / உசிலம்பட்டி / மேலூர் / திருமங்கலம்.

<u>நகல்:</u>

1. கூடுதல் தலைமைச்செயலர்/வருவாய் நிர்வாக ஆணையர்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை-05.
(தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)

2. அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சித்துறை,
தலைமைச்செயலகம், சென்னை-09.
(தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)

3. அரசுச்செயலாளர், சட்டத்துறை, தலைமைச்செயலகம், சென்னை-09.

4. நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதிவாரியம், சென்னை-05.

5. அனைத்து வட்டாட்சியர்கள், மதுரை மாவட்டம்.

Scanned by CamScanner